**செய்தி வெளியீடு எண்: 733** **நாள்: 06.12.12**

# செய்தி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்களின் தலைமையில் கூட்டுறவுத்துறை தொடர்பான ஆய்வுக் கூட்டம் 40,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள் பங்குத்தொகை செலுத்த அரசு உதவி பங்குத் தொகை ரூ.250லிருந்து ரூ.2500 ஆக உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தலைமையில் இன்று (6.12.2012) கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது :

கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர் கடன் பெற அவர் குறிப்பிட்ட விகிதாசாரத்தில் பங்கு செலுத்த வேண்டும் . நலிவுற்ற மக்கள் குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவர்கள், மாற்றுத்திறளாளிகள், ஆகியோருக்கு வட்டியில்லாக் கடன்களை அரசு அளித்து வருகிறது. இவர்கள் ஒவ்வொருவரும் கடன் பெற பங்குத் தொகையாக ரூ.10% தொகையை பங்குமூலதனமாகக் செலுத்த வேண்டும். இதுவரை ரூ.250 பங்குத் தொகையை அரசு செலுத்தி வந்தது. இதனை பயனாளிகள் ஐந்தாண்டுகளில் திரும்பச்செலுத்த வேண்டும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்கள் பொருத்தமட்டில் அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை கருத்தில் கொண்டும் அவர்கள் அதிக அளவில் கடன் பெற்று அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக அவர்கள் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய பங்குத்தொகைக்கென ரூ. 2500/- ஆக உயர்த்தியதுடன், இதனை திருப்பி செலுத்தாத மான்யமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அரசு வழங்கியுள்ளது. மானியமாக 40000 உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 10 கோடியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு அளித்துள்ளது. இதன் மூலம் இவர்கள் பயிர்கடன்கள் மட்டுமல்லாது வேளாண்மை சார்ந்த முதலீட்டுக் கடன்களை ரூ. 50,000 வரையில் கடன் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க்கடன் வாங்கிய உறுப்பினர்கள் தாம் பெற்ற கடனை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்தினால் அவர்கள் பெற்ற பயிர்க்கடனுக்கான வட்டியை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்கிறது.

சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்றும், அவர்களின் பொருளாதார வாழ்வினை மேம்படுத்தவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 25.8.2001 அன்று பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் "**ஊட்டி டீ**" என்னும் பெயரில் தேயிலை விற்பனை மேற்கொள்ளப்பட்டது. இந்த "**ஊட்டி டீ**" சரியான அளவில் மணம் மற்றும் தரம் ஆகியவற்றுடன் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிவகுத்துள்ளார்கள்.

2001–2002ஆம் ஆண்டில் 11.94 இலட்சம் கிலோவாக இருந்த "**ஊட்டி டீ**" விற்பனை 2011–12ஆம் ஆண்டில் 27.40 இலட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது. இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சாதனை என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவுத்துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. ப. அண்ணாமலை இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு. அ. சங்கரலிங்கம், திரு. இரா. கார்த்திகேயன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**